**தலைவர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: திரு.N.ராமநாதன்,B.A., B.L.,**

**ந.க.எண்.2023/2021/இ2** **நாள்: 15.02.2022.**

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை –இளநிலை உதவியாளாகள் தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை, கூடுதல் மன்றங்கள் மதுரை மற்றும் கோவை – அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2018-19 & 2019-20 மூலம் நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களின் பதவியிடத்தில் பணிவரன்முறை செய்து – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.2469/PSD-1/2020, நாள்.26.05.2020.
2) தலைவர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.2328/2019/இ2, நாள்.27.08.2020.

*****

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-19 & 2019-20-ம் ஆண்டு தொகுதி IV அடங்கிய தேர்வின் மூலம் கீழ்கண்ட இளநிலை உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் தலைவர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டு, தனியாளர்களின் கல்வி தகுதி மற்றும் பணி அமர்வு தொடர்பான பிற சான்றுகள் சரிபார்க்கப்பட்டு கீழ்குறிப்பிட்ட நாட்களில் பணியில் சேர்ந்தனர்.

2) மேலும், தனியாளர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்ய தமிழ்நாடு அமைச்சு பணியாளர்கள் விதி 32(அ)(1)-ன்படி கீழ்கண்ட தேதியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகின்றது.

| வ. எண். | பெயர் திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | D.கோமதி | த.நா.வி.வ.மே.மு.தீ(கூ.ம), கோவை | 01.09.2020மு.ப. | 01.09.2020மு.ப. |
| 2. | P.M.சக்கரவர்த்தி | த.நா.வி.வ.மே.மு.தீ, சென்னை | 04.09.2020மு.ப. | 04.09.2020மு.ப. |
| 3. | G.M.சித்ரா | த.நா.வி.வ.மே.மு.தீ, சென்னை | 07.09.2020மு.ப. | 07.09.2020மு.ப. |
| 4. | R.ரகுராம் | த.நா.வி.வ.மே.மு.தீ(கூ.ம), மதுரை | 07.09.2020மு.ப. | 07.09.2020மு.ப. |

Scanned with OKEN Scanner

4) மேற்படி இளநிலை உதவியாளர்கள் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகின்றது.

5) தகுதிகாண் பருவக்காலத்தில் மேற்படி தனியாளர்கள் கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/ பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகின்றது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (TN Government Office Manual)
2. அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி

6) இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளைகளில் பணிநியமன ஆணைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

7) மேற்கண்ட தனியாளர்கள், பணிவரன்முறை ஆணையினைத் தொடர்ந்து, இரண்டாவது மற்றும் அதற்கு பிறகுமுள்ள வருடாந்திர ஊதிய உயர்வினை, தகுதிகாண் பருவம் முடித்தபிறகு பெற தகுதியுடையவர்களாவர்.

ஓம்/N.ராமநாதன்
தலைவர்

பெறுநர்

இளநிலை உதவியாளர்கள்,
தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை.
மதுரை (கூ.ம) மற்றும் கோவை (கூ.ம) (கூடுதல் நீதித்துறை உறுப்பினர் வாயிலாக),

நகல்:

1. செயலாளர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (கூ.ம), மதுரை. (தனியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து பணிப்பதிவேட்டின் பக்க எண்ணை இவ்வலுவலகத்திற்கு உடனடியாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.)
2. செயலாளர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (கூ.ம), கோயமுத்தூர். (தனியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து பணிப்பதிவேட்டின் பக்க எண்ணை இவ்வலுவலகத்திற்கு உடனடியாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.)
3. உதிரி-1

/உண்மைநகல்/உத்தரவின்படி/அனுப்பப்படுகிறது/

15.2.22.
செயலாளர்
தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத்
தீர்ப்பாயம், சென்னை-104.

15.2.22

Scanned with OKEN Scanner